

# தென்னாடு

www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2051 வீறியெழல் ஆண்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள், 15ம் நாள் (28.01.2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவுப் பிறந்தநாள்



சிவபூமியில் சைவப் பரம்பரையை உரு வாக்கிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 96வது நினைவுப் பிறந்தநாள் மார்கழி 23ம் நாள் கொண் டாடப்பட்டது.

02 ▶

## தைப் பொங்கல் தமிழர் வருடப்பிறப்பு அல்ல இளவேனில் சித்திரையே எங்கள் வருடப்பிறப்பு

### தைப்பொங்கல் தான் தமிழர் வருடப்பிறப்பு என்பது தமிழரின் ஆழ்ந்த வானியல், கணித அறிவினை மழுங்கடிக்கும் திட்டமிட்ட சதியா?



தமிழர் வருடப்பிறப்பு தைத்திங்களா அல்லது சித்திரையா என்று பல கேள்விகள், பல கதைகள், பல அரசியல் முன்னெடுப்புகள் என்று தமிழரின் ஆழ்ந்த அறிவியலை அறியாமல் எழுந்தமானமாக பல செய்திகள் இந்த நூற்றாண்டில் பரவியுள்ளது. தமிழரின் வானியல் மற்றும் கணித அறிவின் ஆழத்தினை இன்னும் சரியாக மற்றும் முற்றாக அறியாமல், தமிழையும் சமயத்தினையும் வேறுபடுத்தி, தமிழைச் சமயத்தில் இருந்து கழற்றி அதை வைத்து அரசியல் இலாபம் தேடுபவர்களின் கூற்றுகளில் குறுகித் தொலையாமல், ஆழச் சிந்தித்து, அறிவியலுடன் இணைத்து தமிழரின் மரபினை உன்னிப்பாக ஆராய்ந்து, உலகின் அதியுயர் அறிவியலைக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்ற பெருமையுடன் அணுகி உங்கள் சிந்தகைளைத் துலக்கிக்கொள்ளுங்கள்.

உங்களிடமிருந்து கைப்பேசிகள், கடிகாரங்கள் போன்றவற்றை எடுத்துவிட்டு இரவில் நேரம் கேட்டால் அல்லது நாள் மாறிவிட்டதா (நள்ளிரவு) என்று வினவினால் பதில் கூறமுடியுமா? நிச்சயமாக இல்லை. ஆனால் பண்டைத் தமிழர்கள் நாள் மாற்றத்துடன், பருவமாற்றம், கால மாற்றம் போன்றவற்றினை துல்லியமாகக் கணித்து மேலாக உணர்ந்து , அதன் வழி வாழ்ந்தார்கள். அவர்கள் சூரியனை மட்டும் வைத்து கணித்தவர்கள் அல்ல. சூரியன், சந்திரன், நாண்மீன் போன்று பலவகையான மூலத் தளங்களை வைத்து மாற்றங்களை கணித்தனர்.

தமிழ்ப் பண்பாட்டின் ஆறு காலங்களான இளவேனில், முதுவேனில், கார் காலம், கூதிர் அல்லது குளிர் காலம், முன்பனி, பின்பனி என்பவற்றில் முன்பனிக் காலமான தையில் மற்றும் பின்பனி மாசியில் அறுவடைகள் நடைபெறுகின்றன. தைப்பொங்கல் தமிழ்ப் புத்தாண்டல்ல, பண்பாட்டின் அரும் பெரும் தொடக்கமான விவசாயத்தின் அறுவடையை கொண்டாடும் நன்னாள். விலங்குகள் போல் அலைந்து திரிந்த மனிதன் விவசாயத்தின் பெயரில் ஓரிடத்தில் நிலையாகினான். நிலையான தமிழனை குடியானவன் என்றோம். அதிலிருந்தே பண்பாட்டு வளர்ச்சி ஆரம்பமாகியது. எமது பண்பாடே உலகின் முதற் பண்பாடு.

இந்நன்னாளில் உழவர்களையும் அவர்களுக்குத் துணைநின்ற விலங்குகள், மேலாக ஐம்பூதங்களின் வடிவங்களான நிலம், நீர், ஒளி தரும் அருக்கன் அதற்கும் மேலாக அருக்கனில் சோதி அமைத்தவனாகிய ஐம்பூதங்களில் உள்நின்று இயக்கும் இயவுளாகிய சிவ பெருமானையும் நினைந்து நன்றி பாராட்டி, வணங்கி மகிழ்ந்தெழும் ஆனந்த நன்னாள தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்” சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே தமிழர் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது.

சித்திரைத் திங்களே பழந்தமிழரின் புத்தாண்டு என்பதை நெடுநல்வாடை சிறப்பாக எடுத்துரைக்கிறது. ‘திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலம்” என விளக்கியுள்ளார் நக்கீரர் அவர்கள். இங்கு ஆடு தலையாக என்பது , மேழம் தான் ஓரையில் முதலாவது மற்றும் தலையானது. அதுவே ஆண்டின் பிறப்பாகும் என்பதாகும்.

வானவர்கள் மலர் மாரி மண் நிறைய விண் உலகின்
மேல் நிறைந்த ஐந்து பேரிய ஒலியும் விரிஞ்சன் முதல்
யோனிகள் ஆயின எல்லாம் உள் நிறைந்த பெரு மகிழ்ச்சி
தான் நிறைந்த சித்திரையில் சதயம் ஆம் திருநாளில்

இதில் அப்பர் சுவாமிகள் முத்திபெற்ற சித்திரைத் திங்களை சேக்கிழார் சுவாமிகள் மேல்வருமாறு விபரிக்கின்றார்.

தமிழர் வானியல் மற்றும் அறிவியல் அடிப்படையில் சில கேள்விகள்

(06ஆம் பக்கம் பார்க்க)

## திருவாசகத்தில் ஒரு வாசகம்

நான்முகன் முதலா வானவர் தொழுதுஎழ
ஈர் அடியாலே மூஉலகு அளந்து - போற்றித் திருஅகவல் (1-2)




திருமால் மூன்று உலகங்களையும் ஈரடியாலே அளந்தபொழுது அவரது பாதங்களை நான்முகன் முதலான தேவர்கள் வணங்கினர். இத்துணை பெருமைகளை உடைய திருமால் , வராக வடிவமெடுத்து இறைவனின் திருவடிகளை காணவென்று கீழுலகெங்கும் சென்றும் காணமுடியாத பெருமைக்குரிய திருவடிகள் எங்கள் தில்லை மூதூர் ஆடிய திருவடிகள்.

ஈரடியால் மூவுலகளந்த திருமாலுக்கு ஏன், பேரண்டத்தினையே துகள்களாக எண்ணுமளவிற்கு பெரியவராகிய சிவபெருமானின் திருவடிகளை கண்டுகொள்ள முடியவில்லை என்பதற்கு அடுத்து வரும் வரியான ”அடி முடி அறியும் ஆதரவு அதனில்” தெளிவு பகர்க்கின்றது. அதாவது திருவடிகளை வணங்குவதற்காக அல்லாமல், ஆணவ மேலீட்டால் யார் முதலிற் காண்பது என்ற போட்டியிலே தான் தேடினார்கள் என்பதே.

அம்பாள் பூசை செய்தது காஞ்சிபுரம் , முருகன் பூசை செய்தது திருமுருகன் பூண்டி, பிள்ளையார் பூசை செய்தது கணபதீச்சரம், பிரமா வணங்கியது பிரம்மபுரீசுவரம், இராமர் வணங்கியது இராமேசுவரம், கிருஷ்ணர் வணங்கியது சீர்காழி, பரசுராமர் பூசை செய்தது திருப்பாச்சூர், வாமணர் பூசை செய்தது திருமாணிக்குழி, மச்சன் பூசை செய்தது மச்சேசுவரம், கச்சன் பூசை செய்தது திருக்கச்சூர் இப்படியாக எல்லோரும் சிவனை வழிபட்டுத் தான் பலன் பெற்றனர். அப்படியான சிவபெருமானின் சிவபரத்துவத்தினையே உணர்த்துகின்றன இந்தப்பதிக வரிகள்.

## தைத்திங்கள் மறைமதி நாளில் தென்புலத்தார் வழிபாடு மிகவும் சிறப்பானது

### (இம்முறை தைத்திங்கள் 29 நாள் / பெப் 11)



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மடிந்தவர்களை வழிபடும் மரபு பண்டைய காலத்தில் இருந்தே இருந்து வருகிறது. சங்ககால முறைமைக்கு வருவதற்கு முன்னர் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆதித்தமிழர்கள் குமரிக்கண்டத்தில் / தென்னாட்டில் உயிர் நீத்தவர்களை வழிபடுகின்ற வழமைகளில் இருந்தது என்பதற்கு இலக்கியச்சான்றுகள் உள்ளன.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை - திருக்குறள்

தென்திசையில் உள்ள இறந்த மூதாதையர்கள்,தெய்வங்கள்,விருந்தினர்கள் ,உற்ற குடும்பத்தார்கள் உறவினர்கள் சுற்றத்தார்கள், தான் என்னும் தன்னை ஆக்கிய ஐந்து வகையாரையும் பேணி வளர்த்து உபசரித்து சீர்தூக்கிப் போற்றி வாழ்வதே சிறப்பாகும். அதுவே இல் வாழ்க்கையின் அறமாகும்.

பேரொடுக்கம் (மகாலய அமாவாசை) போன்று தைத்திங்களில் வரும் மறைமதி (அமாவாசை) நாளும் பிதிர்களுக்கு உரிய நன்னாளாகும். இத்தினத்தில் உங்கள் இறந்த தாய், தந்தையர் முன்னோர்களுக்காக விரதமிருந்து இறைவனையும் அவர்களையும் வழிபட்டு, இல்லாதவர்களுக்கு தானங்கள் (உணவு, உடை) கொடுத்து உங்கள் முன்னோர்களின் அவ்வுலக வாழ்விற்கு அறம் சேர்க்கும் கடனை செய்து வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

## ‘பொங்குவோம் பொங்கவைப்போம்’ திட்டத்தில் 1150 பானைகள் அன்பளிப்பு



ஒசுத்திரேலியா அறம் அறக்கட்டளை மற்றும் சைவ மாணவர் சபையின் முன்னெடுப்பில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட “பொங்குவோம் பொங்கவைப்போம்” திட்டத்தில் இந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கொடுவாமடு, சவுக்கடி, சித்தாண்டி மாவடிவேம்பு, பலாச்சோலை, வந்தாறுமூலை, ஆரையம்பதி, ஏறாவூர் குடியிருப்பு, வம்மிவட்டுவான், வாகரை 5ம் வட்டாரம் மற்றும் அம்பாறை மண்டானை, பொலன்னறுவை சமன்பிட்டி, வவுனியா, சாவகச்சேரி மற்றும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 1150 பொருளாதார நிலையில் நலிவடைந்த குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் அடங்கிய பொங்கல் பானைகள் வழங்கப்பட்டன. தமிழர் திருநாளாகிய பொங்கல் மற்றும் அதுசார் பண்பாட்டினை எதிர்கால சமுதாயத்திற்கு ஊடுக்கடத்தவும் இயன்றளவு எல்லா வீடுகளிலும் பொங்கல் நடைபெறவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடனும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



இதற்குப் பல ஒசுத்திரேலியா வர்த்தகர்கள், உலகளாவிய பண்பாட்டு ஆர்வலர்கள் மற்றும் சிவனருள் அறக்கட்டளையும் நிதியுதவிகளை வழங்கியிருந்தனர்.

# தங்கம்மா அப்பாக்குட்டி ஆளுமையின் முன்னுதாரணம்
## தனக்குப் பின்னே சமயப் பணியை செய்ய ஒரு பரம்பரையை உருவாக்கியவர்



தமிழ்ச் சமூகத்தில் ஒரு சாதாரண ஆசிரியராக பணியாற்றத் தொடங்கிய ஒருவர் கல்வி கேள்விகளிலே வல்லவராகவும், ஆலயப் பணியும் சமூகப் பணியும் இணைந்து உலகளவிய ரீதியில் புகழ் பெற்றவராகவும், தனக்குப் பின்னே சமயப்பணியை செய்ய ஒரு பரம்பரையை உருவாக்கிய வராகவும், சமயத் தொண்டுக்கும் சமூகத் தொண்டுக்கும் சைவ இலக்கிய சாத்திர சொற்பொழிவுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவராகவும் விளங்கிய சைவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும் பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும் விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும் அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் சொன்ன அத்தனையையும், தானும் தன் ஊருமாகக் கொண்டு, தன் ஊரை ஏன் யாழ்ப்பாணத்தினையே அடவி காடாக இல்லாமல் சிவபூமியாக மாற்றியவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்றால் மிகையாகாது.

இவர் ஆங்கிலத் திகதி 7 சனவரி 1925ம் ஆண்டு பிறந்தார். ஆறுமுகநாவலரின் பின்னர் உருவான வெற்றிடங்களை நிரப்புவதில் இவரின் வகிபாகம் முக்கியமானதொன்றாகும். கோவில்கள் தனியே வழிபாட்டிற்கு மட்டுமல்ல சமுதாயத் தொண்டுக்கும் உரிய இடமாகும் என்ற கருத்தினை நிகழ்த்திக் காட்டியவர் அம்மா அவர்கள்.

3 பெப் 1982ம் ஆண்டு சைவப் பெண் சிறார்களுக்கு இல்லம் அமைக்கும் பணியைத் தொடங்கினார். இவரது இந்தப் பணியே இன்று சிவபூமியாக உருவெடுத்து நிற்கிறது என்றால் மிகையாகாது. தனது புலமையால் பேச்சாற்றலால் உலகெங்கும் சென்று சைவத்தினை பரப்பியது மட்டுமல்ல அதில் வந்த உதவிகளையும் திறம்படக் கையாண்டு இல்லத்தினை திறம்பட நடத்திவந்தார். 1965ம் ஆண்டளவில் இருந்தே உலகளவில் பல மேடைகளில் கலக்கிய ஈழத்து பெண் அம்மா அவர்கள்.

1966 இல் மதுரை ஆதீனம் “செஞ்சொற் செம்மணி” என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது. 1969ம் ஆண்டு தருமபுர ஆதீன தலைமையில் அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடாத்திய பெரியபுராண விழாவில் இவர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றியமை இவரது புலமைக்கு சொற்பெருக்குக்கும் கிடைத்த கௌரவம் எனலாம். பெண்களெல்லாம் வீடுகளில் முடங்கிக் கிடந்த காலத்தில் அம்மாவின் சமூக வெளிப்பாடு நிச்சயம் ஈழத்து பெண்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றே கூறலாம்.

இப்படிபட்ட பல பெண்கள் ஈழத்தில் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். அம்மாவே மீண்டும் பிறந்து வந்து எங்கள் சிவபூமியில் மீண்டும் சைவப் பணியை தொடரவேண்டும் என்று எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதப்பெருமானையும் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மனையும் வேண்டி விண்ணப்பம் வைக்கிறேன்.

இவர் ஈழத்து சைவப் பெண்களினூடு விதைத்த விதைகள் பல அவர்களையும் அவர்கள் பிள்ளைகளாயும் சைவ சமயிகளாக உருவாக்கியுள்ளது. இவரைப்போல சைவத்தினை வளர்ப்பது மட்டுமல்ல எதிர்காலத்தில் சைவத்தினை வளர்க்கும் சமுதாயத்தினையும், அடுத்த தலைமுறைச் சமயத் தலைவர்களையும் உருவாக்க நாம் தவறிவிடக்கூடாது என்பதை சிந்தித்து சிவபூமியில் சைவத்தின் வாழையடி வாழைகளை உருவாக்குவோம் என்று அம்மாவின் பிறந்தநாளில் சத்தியம் செய்துகொள்வோமாக.

தலைவர்களை உருவாக்குபவனே சிறந்த தலைவன் அல்லாமல்
தலைமைத்துவத்தினை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவன் அல்ல
- தென்னவன்

பொதுத் திட்டங்களைச் செய்யும் அமைப்புகள் மற்றும் தலைவர்கள் மேலாக பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், எதிர்காலத்தினை சிந்தனையில் கொண்டு சிறந்த பண்புள்ள சைவத் தலைவர்களை உருவாக்க முன்வரவேண்டும். அந்தப்பணியே சிறந்த வரலாற்றுப்பணி. இதனை அளவுகோலாக வைத்து ஒவ்வொருவருட முடிவிலும் உங்களை நியமப்படுத்திப் பயணிப்பது சிவபூமியில் சைவத்தினையும் தமிழையும் நிலைநிறுத்த வழிசமைக்கும்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருவம்பலம் தென்னவன், தென்னாடு.**

# தெய்வத்தமிழில் தெய்வம் தொழு அதன் அருளாற்றலை அனுபவி



சிவத்திரு.
பா.சிவமாதவன்,
புதுக்கோட்டை

உலகில் பல வகையான பண்பாடுப் பழக்கவழக்கங்கள் பரவிக்கிடக்கின்றன. பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளை மக்கள் பின்பற்றி வருகின்றனர். தான் பேசு வதற்கு ஒரு மொழியும் கடவுளை வணங்கு வதற்கு ஒரு மொழியுமாக மாறான ஒரு நடைமுறையை எந்த நாட்டிலும் பின்பற்றுவதாக தெரியவில்லை. ஆனால் எல்லா வகையிலும் பெருமை உடையதாக தனிப்பெரும் சிறப்பினையுடைய தமிழ் மொழியில் இறைவனை வழிபாடு செய்ய பெரும்பாலும் தடைகள் வருவது, தமிழ் இனத்தையும் அதன் பண்பாட்டையும் மட்டுப்படுத்துகின்ற ஒரு செயலாகவே பார்க்கத்தோன்றுகிறது.

கண்ணுதல் பெரும் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப் பசுந்தமிழ் - பரஞ்சோதி முனிவர்

நிழல்பொலி , கணிச்சிமணி நெற்றி , உமிழ் செங்கண், தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் - கம்பர்

இப்பொழுது நாம் தமிழ் வழிபாடு என்று கூறிய உடனே, ”ஆதி காலத்திலிருந்தே வடமொழியில் இருந்துதான் வேதங்கள் தோன்றின. வழிபடும் முறைகளும் அதில் இருந்துதான் வந்தன”என்ற கூச்சல் உடனே வந்துவிடும். அதுபோல நீங்களாக ஒன்றை உருவாக்கினால் இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டார், எனக் கூறுவது தமிழ் மற்றும் தமிழரின் பண்பாட்டின் மீதான அடக்குமுறையின் தொடர்ச்சி என்றே நாம் கருத முடிகிறது. ஏனெனில் தமிழ் வழிபாடு என்பது இன்று தோன்றிய ஒரு புதுமையான விடயமன்று.

முதலில் எந்தவித சான்றையும் நோக்காமல் ஒரு தமிழராக சிந்தித்து பார்த்தோமேயானால் தமிழ் உயர்தனிச் செம்மொழி, எந்த மொழியின் துணையின்றி தனித்தியங்கும் ஆற்றல் உடையது, அதுமட்டுமின்றி தெய்வத்தமிழ் என்றெல்லாம் கூறிவிட்டு, தெய்வத்தை வணங்க அதாவது வழிபாடு செய்ய உகந்த மொழி அல்ல என சிலர் நினைப்பதை திணிப்பதை நாமும் ஏற்றுக்கொண்டு இந்நாள் வரை வாழ்ந்து வருவதை எங்ஙனம் கூறி வருந்துவது. நமது பிறவியிலேயே பார்வைக் குறைபாடு இல்லை என்பதை நன்றாக உணர்ந்த பின்னும் கூட பிறர் பார்த்து சொன்னால் தான் சரியாக இருக்கும் என்பதை போலத்தான் இன்றைய வழிபாட்டு முறையில் தமிழர்களாகிய நாம் சிக்குண்டு கிடக்கிறோம்.

சரி! இங்கு சிலர் தமிழில் வழிபாடு செய்தால் இறைவனுக்கு புரியாது, அவரின் கோபத்திற்கு ஆளாக கூடும் என்றெல்லாம் கூறுகிறார்களே, என்ன செய்வதென பலர் நினைக்கலாம். ஆனால் சிவனோ இவர்கள் கூறுவது போல் அல்லாமல் என்னை தமிழால் செவிகள் குளிரப் பாடுங்கள் என்றும், மேலும் யாராவது என்னை அர்ச்சிப்பதற்கு தமிழ் உகந்ததல்ல என்று கூறினால், நம்பி ஆரூரனிடம் நான் கூறிய வாக்கு மூலத்தை எடுத்துரையுங்கள் என்று பல தெய்வக் கூற்றுகளை அடுக்கியிருக்கிறார்.

பெரியபுராணத்தில் தான் அந்த தனிப்பெரும் வரிகளும் மிளிர்கிறது. சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட பின் அவரிடம் கூறுகிய வரிகள் ,

“மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார் ”-பெரியபுராணம் 216

இறைவன் தமிழை எந்த அளவிற்கு விரும்புகிறாரென்று இதன் மூலம் நமக்கு வெளிப்படையாகவே தெரிகின்றது. சுந்தரர் பாடியவை யாவும் சிவனை அர்ச்சித்து பாடியது என்ற உண்மையின் வாயிலாக பன்னிரு திருமுறைகளையும் இறைவனே அருளாளர் வாயிலாக எமக்கு தந்தார் எனலாம்.எவருக்கு புரியாது, கோபம் கொள்வார் என்றார்களோ, அவரே தான் சொல்லியிருக்கிறார் தமிழில் பாடினால் தான் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று. இறைவனே கூறிய பிறகு நமக்கு வேறென்ன வேண்டும்.

அது மட்டுமின்றி சிவபெருமான் தன் கைப்பட எழுதியதும் தமிழ் தான். அவை மணிவாசகர் சொல்லச் சொல்ல தான் எழுதி அழகிய திருச்சிற்றம் பலமுடையான் என்று கையொப்பமிட்ட திருவாசகம், பாணபத்திர புலவருக்காக சேரமான் பெருமானுக்கு எழுதிய திருமுகப்பாசுரம் , பெற்றான் சாம்பான் என்பவர் முத்திபெற தில்லைவாழ் அந்தணரான உமாபதி சிவனாருக்கு எழுதிய கைச்சீட்டு, தருமிக்கு பொற்கிழி அளிப்பதற்காக எழுதிய குறுந்தொகைப் பாடல் என இன்னும் பல.

சேரமான் பெருமானிடம் பொருள் வேண்டி சிவனே எழுதிய திருமுகப்பாசுரம் (பதினோராம் திருமுறை)

**அனுப்புபவர்: (சிவன்)**
மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

**பெறுநர்:**
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க

**உள்ளடக்கம்:**
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே

அடுத்து சிவபெருமான் பெற்றான் சாம்பான் முத்தி பெறவேண்டி உமாபதி சிவாச்சாரியாருக்கு எழுதிய சீட்டு

அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றக்
குடியார்க்கு எழுதிய கைச்சீட்டு – படியின் மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை
செய்துமுத்தி கொடுத்தல் முறை

அத்துடன் திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் தமிழில்தான் இறைவனைப் பாடிப் பரவியிருக்கிறார்கள். திருஞானசம்பந்தப் பெருமானும் தன்னை தமிழ் ஞானசம்பந்தன் என்றும் தமிழோடு தன்னை இணைத்து தான் பாடியிருக்கிறார். தன்னை குறிப்பிடும் இடமெல்லாம் தமிழை குறிப்பிடுகிறார்.

அப்பர் பெருமான் தமிழை இறைவனைக் காட்டும் படிமக்கலம் அதாவது கண்ணாடி எனக் குறிப்பிடுகிறார்.

பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேல்தமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலம் செய்து தொழுதுய் மடநெஞ்சமே

இறைவனை காட்டுகின்ற கண்ணாடி என்பது தமிழ்தான், தமிழால் தான் இறைவனைப் பார்க்க முடியும் , தமிழால் நாம் இறைவனை கண்டு கொள்ளலாம் என்று தன்நெஞ்சுக்கு மட்டுமல்லாது நமக்கும் அறிவுறுத்துகிறார்.

அதுமட்டுமின்றி அப்பர் பெருமான் பாடிய தேவாரப் பதிகத்தில் ”சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்” என்ற பாடலின் வாயிலாக இறைவனுக்கு சாற்றுவதற்காக மலர்கள் , தூபம் இவை இருந்தால் மட்டும் போதாது தமிழும், தமிழ் பாடலும் இருந்தால் தான் இறைவன் மகிழ்வார் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

அத்துடன் தமிழ் ஆகமம் தந்த திருமூலர் கூற்றில் ”என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே” என்று அதாவது இறைவனை மேலும் மேலும் தமிழில் பாடவேண்டும் என்ற உண்மையை விளக்கி நிற்கிறார்.

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே

சுந்தரருக்கு கிருபாபுரீசர் (சிவன்) தமிழில் சொன்னதை தெய்வக்கூற்றாக சேக்கிழார் பெருமான்

முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம் என்றார்

நிறைவாக நாம் எந்த மொழியையும் குறைத்து மதிப்பிட்டோ அல்லது வழிபாட்டு முறைகளை தவறாகவோ பேசவில்லை. அதே வேளை நம் தாய் மொழியாகிய தமிழில் வழிபாடு செய்வது நமது உரிமை மற்றும் கடமையும் ஆகும். அதனை உறுதிப்படுத்தவே, சிவபெருமானும் தமிழ், தன்னைக் காட்டும் கண்ணாடியென்றும், அர்ச்சனை செய்ய உகந்ததென்றும், தன்னைப் பற்றி கூற வல்லதென்றும், தான் எழுதியதும் தமிழ்தான் என்றும் மிகத் தெளிவான சான்றுகளை அருளாளர்கள் ஊடாக வாரி வழங்கியுள்ளார்.

எமக்கு புரியும் வண்ணம் புரியும் மொழியில் இறைவனை வழிபடுவோம். இறைவனுக்கு புரியாத மொழி என்று ஒன்று இல்லை. இறைவனுக்கு இது புரியாது, அது புரியாது என்று இறைவனை சிறுமைப்படுத்தும் எண்ணமும் நமக்கில்லை. எனவே எல்லாம் அறிந்த இறைவனை நாம் நம் மொழியில், நமக்கு புரிந்த அளவில் வழிபாடு செய்வோம். சிவன் தந்த தமிழால், சிவன் விரும்பிய தமிழால், சிவன் எழுதிய தமிழால் சிவனை வழிபடுவது சிறப்பைத்தான் தரும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்கமுடியாது. தமிழாயும் தலைவனை தமிழால் வழிபடுவோம்.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
www.thennadu.org



சிவத்திரு.செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாட்டுத் திண்ணை,
சைவ மாணவர் சபை (பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org

# தை பிறந்தது! வழி பிறக்குமா?

சூரியனின் தென்முக நகர்வு நிறைவடைந்து வடமுக நகர்வு ஆரம்பிக்கின்ற தனுராசியில் இருந்து மகர ராசிக்கு சூரியன் புகுகின்ற தைமாதப் பிறப்பு நிகழ்ந்துள்ளது வயல் விளைந்து செழித்து அதில் புதிரெடுத்துச் சூரியனுக்கு பொங்கலிட்டு மகிழ்ந்தோம்! உலகின் தனிப்பெரும் பண்பாட்டுக் கோலங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழன், உழவுக்கு துணை செய்த ஆவினங்களுக்கும் நன்றி சொல்லிப் பொங்கலிட ஒருநாளையும், ஊர்கூடிப் பொங்கலிட "காணும் பொங்கல்" என்ற நாளையும் தன்னோடு இணைத்துக் கொண்டான். தை பிறந்து விட்டாலே, புதுவழி பிறக்கும் என்ற நம்பிக்கை, ஆண்டாண்டு காலமாய் தமிழர்களோடு ஒன்றித்துப் போனதொன்று! ஆடியில் நிலத்தை உழுது பண்படுத்தி, விதையிட்டு, சேமிப்பில் இருந்தவற்றை எல்லாம் செலவு செய்து, அதனை பாதுகாத்ததால், தற்காலிகமாக ஏற்பட்ட வறுமை, அறுவடையால் அகன்று விடும் என்ற நம்பிக்கையே, "தை பிறந்தால் வழி பிறந்து விடும்" என்ற, விவசாயத் தொல்குடிச் சமுதாயமாக இருக்கின்ற தமிழர்களின் எண்ணப்பாட்டிற்கு காரணமானது எனலாம்.

இன்று, எம்மை சூழவும், சர்வதேச ரீதியில் மக்கள் அனைவரும் அல்லலுறும், பெரு நோய்த் தொற்றும், பணமுதலைகளின் சதியும் பரவியிருப்பதனை காண்கின்றோம். எல்லா சமயத்தவரும் தம்மைத் துன்பம் அண்டக்கூடாது என தத்தம் கடவுளை வேண்டி அழுது தொழுகின்றனர். "நோயுளார் வாயுளான்" என்று ஞான சம்பந்தர் பாடியது இன்று எம்முன்னே தெரிகின்றது. வெறுமனே தை பிறந்து விட்டால் மட்டும் இந்தக் கொடுந் துயரங்கள் நீங்கிப் புதுவழி பிறந்து விடுமா? என்ற கோள்வியை நாம் எமக்குள்ளே கேட்க வேண்டும்! நமது நாட்டில் காலம் தவறிப் பெய்த பெருமழையால் வயல்களெல்லாம் முற்றி அறுவடைப் பருவத்தில். வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. வன்னிப் பெருநிலப் பரப்பிலும் குறிப்பிடத் தக்க நெல் அழிவு இடம்பெற்றிருக்கின்றது! எனவே விவசாயப் பெருங்குடிகளின் வாழ்வும் சிறக்குமா? என்பது கோள்விக் குறியே!

இந்த இடத்தில் தான் எம்மை எல்லாம் மீறிய இயற்கை சக்தியை இறைசக்தியாக, இந்த உலகைச் சூழ்ந்திருப்பதை உணர்கின்றோம். இந்த உலக நன்மைக்காகவும், அமைதிக்காகவும், வேள்விகளையும் பூசை வழிபாடுகளையும் பல்லாண்டுகளாக செய்தும் பலனின்றியே தவிர்க்கின்றோம்! நிற்க. எமது வழிபாட்டுக்கு இடையிலே திணிக்கப்பட்ட வடமொழியைத் தக்கவைக்க, அதனை திணித்த சிலர், நாம் வீற்றிருக்கின்ற "அதிகார ஆசனங்கள்" கொடுத்த ஆற்றலால், இறைமொழியாகிய தமிழில் வழிபாடு செய்வது, உலக அழிவை ஏற்படுத்தும் என்றும், அப்படி வழிபாடு செய்பவரின் குலம் அழிந்து விடும் என்றும் கதைகட்டி வைத்தனர்! ஆனால் நடந்தது என்ன?

இயற்கையின் சமநிலையோடு இனிதாக அமைந்த உலக வாழ்வு உருக்குலைந்து போனது! கோடிய யுத்தங்களும் உயிர் அழிவுகளும், இயற்கைச் சீற்றங்களும் தான் மாறி மாறி இத்தனை ஆண்டுகளாக எம்மை காவுகொண்டது! வழிபாட்டுக்கானதாக மட்டுமன்றி வாழ்வியலுக்காகவும் எம்முன்னவர்கள் திடமான அத்திபாரங்களின் மீது கட்டியெழுப்பிய "தமிழ்" இறைவனை வழிபட ஏற்றதல்ல என்று ஒதுக்கியதன் விளைவே இவை எல்லாம் என்பதை நாம் உணரவேண்டும்! இந்த மொழி சொன்ன விழுமியங்களும், கொள்கைகளும், உலக நீதியும், இயற்கையின் சமத்துவத்தைக் கட்டிக்காக்கும் அருமருந்துகள் என்பதை அடுத்த தலைமுறைக்கேனும் சொல்வோம்! வரலாற்றின் வழி வெல்வோம்!

**"தை பிறந்தது! வழி பிறக்கவேண்டுமாயின் எம்மொழி சிறக்க வேண்டும்!"**

# அம்பலவாண நாவலரின் சிந்தனையில் மதமாற்றத்தினை தடுக்க உருவாக்கப்பட்ட கலைக்கோயில் வட்டு இந்துக் கல்லூரி




எமது நாடு அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடி பணிந்திருந்த வேளை, சைவமும் தமிழும் திட்டமிட்டு நசுக்கப்பட்டு கிறிஸ்தவமும் ஆங்கிலமும் பரப்பட்ட வேளையில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் தோன்றி சைவத்தையும், தமிழையும் காத்தற் பொருட்டு கிறிஸ்தவத்திற்கு போட்டியாகச் செயற்பட தொடங்கினார். இந்தச் சூழ்நிலையிலே தான் சித்தன்கோணியைச் சேர்ந்த அம்பலவாண நாவலர் அவர்கள் ஆறுமுகநாவலரோடு இணைந்து அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்று ஆறுமுகநாவலரின் சீடனாக அவரின் பணியை ஆற்றத் தொடங்கினார்.


சிவத்திரு அம்பலவாண நாவலர் - நிறுவுனர்

இக்கால சூழ்நிலையில் தென்னாசியாவிலேயே சகல வசதிகளும் கொண்ட பல் கலைக்கழகத்திற்கு நிகரான உயர்கலாபீடமாக 'வட்டுக்கோட்டை செமினறி' என்ற பெயரோடு இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரியை மிசனறியினர் எனப்படும் கிறிஸ்தவர்கள் உருவாக்கியிருந்தனர். கல்லூரி ஆங்கில மொழி மூலமான கல்வியைப் போதித்தது. இங்கு கற்று வெளியேறியவர்கள் செமினறிப் பட்டதாரிகள் என அழைக்கப்பட்டனர். அக்காலத்தில் அரச தொழில் வாய்ப்பை பெறுவது என்றால் ஆங்கில மொழி அறிவு படைத்தவர்களுக்கே அது வழங்கப்பட்டது. ஆங்கில மொழியறிவை பெறவேண்டுமாயின் வட்டுக்கோட்டை செமனறியிலே இணைந்து கற்கவேண்டியிருந்தது. இங்கு இணைந்து கல்வி கற்க வேண்டுமானால் கிறிஸ்தவராக மதமாற வேண்டிய நிலை அன்று இருந்தது. அரச தொழில் தேவையெனில் கிறிஸ்தவராக மதம் மாறி வட்டுக்கோட்டை செமினறியில் இணைந்து ஆங்கில மொழியறிவை பெறவேண்டிய தேவை சைவப் பிள்ளைகளுக்கு இருந்தது. இதனால் பலர் கிறிஸ்தவர்களாக மாறினர்.

இவ்வாறு சைவத் தமிழ்ப் பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக மதம்மாறி ஆங்கில அறிவைப் பெறும் இச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி ஏழைச் சைவத்தமிழ்ப் பிள்ளைகள் மதம் மாறாமலே ஆங்கில மொழிக் கல்வியைப் பெற்று அரச தொழிலை பெறும் நோக்கில் வட்டுக் கோட்டை செமினறிக்கு இணையாக சித்தன் கோணியிலே 1894ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி தினத்தன்று, (09.10.1894) அம்பலவாண நாவலர் அவர்களால் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே வட்டு இந்துக் கல்லூரி ஆகும். இக் காலத்திலே இப்படியான பாடசாலைகளை ஆரம்பிப்பதிலே பல சிரமங்கள் இருந்தன. இருந்தாலும் அம்பலவாண நாவலர் அவர்கள் இச் சிரமங்களை எல்லாம் பொருட்படுத்தாது தனது உறவினர் நொத்தரிசு சிதம்பரப் பிள்ளையின் உதவியைப் பெற்று துணிவுடன் பாடசாலையை நடாத்தி வந்தார். முதற் சில வருடங்கள் அம்பலவான நாவலர் அவர்களே இப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக செயற்பட்டார். இவரோடு இணைந்து இலக்கிய உலகில் 'தங்கத்தாத்தா' எனச் செல்லமாக அழைக்கப்படும் நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களும் ஆசிரியராக இணைந்து செயற்பட்டார். அம்பலவாண நாவலர் சோமசுந்தரப் புலவர் போன்ற சிறந்த ஆசிரியர்களின் வழிப்படுத்தல் வழி காட்டலில் ஆரம்பமாகிய கல்லூரியே இன்று புகழ்ந்து பூத்து நிற்கும் வட்டு இந்துக் கல்லூரியாகும். 'தங்கத் தாத்தா' என்று அழைக்கப்படுகின்ற நாவாலியூர் சோம சுந்தரப் புலவர் இக்கல்லூரியில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக (1898 - 1938 வரை) தமிழ் ஆசிரியராகச் சிறந்த சேவையை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பலவாண நாவலரைத் தொடர்ந்து 1906இல் திருவாளர் சின்னத்துரை அவர்கள் அதிபர் ஆனார். இவ்வாறு காலங்கள் நகர அதிபர்களும் மாறக் கல்லூரியும் படிமுறை வளர்ச்சிகள் கண்டு தரமுயர்ந்து வளரத் தொடங்கியது. இத்தகைய வளர்ச்சிப் போக்கிலே கல்லூரி செல்கையிலே அர்ப்பணிப்புள்ள அதிபர்கள் கல்லூரி அன்னையை அலங்கரித்தனர். இத்தகைய அலங்கிப்பிலே கல்லூரி மாணவர்கள் பல சாதனைகளைச் செய்து கல்லூரியை பெருமைப் படுத்தினர். அந்த வகையிலே கல்லூரி மாணவன் திரு.கெ. கனகரத்தினம் கணக்காளர் நாயமாகவும், கல்வி மந்திரியின் பாராளுமன்றத் காரியதரிசியுமாக விளங்கினார். சேர் வேலுப்பிள்ளை, குமாரசுவாமி அவர்கள் வெளிநாட்டமைச்சில் நிரந்தரப் காரியதரிசியாகவும் கனடா நாட்டிற்கு தூதுவராகவும் விளங்கினார். இவ்வாறு படிமுறை வளர்ச்சி கண்ட எம் கல்லூரிக்கு 1917ம் ஆண்டு கல்வியின் தலைவராக இருந்த திரு 'டென்காம்' அவர்கள் வருகை தந்திருந்தார். இதனைத் தொடர்ந்து 1927ம் ஆண்டு அகிம்சை நாயகன் 'மகாத்மா காந்தி' அவர்கள் வருகை தந்திருந்தார். இவ்வாறாகக் கல்லூரிக்கு உயர் பதவி நிலைகளில் உள்ளவர்கள் வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு கல்லூரி வளர்ந்து வருகையில் 1948இல் திரு. எஸ்.சிவகுருநாதப்பிள்ளை அதிபராக கல்லூரிக்கு நியமிக்கப்பட்டார். இவர் கல்லூரியின் வளர்சிக்கு அரும்பணி ஆற்றினார். இவரது முயற்சியால் உருவானதே கல்லூரியின் வள்ளியம்மை மண்டபமாகும். அத்தோடு செல்வலட்சுமி விஞ்ஞான ஆய்வுகூடம் என்னும் ஆய்வு கூடத்தையும் நிறுவினார். இவ்வாறு கல்லூரிக்கு அரும்பணியாற்றிய அதிபர் சிவகுருநாதப்பிள்ளை அவர்களது காலத்தை கல்லூரிக்கு ஓர் பொற்காலம் எனக் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது.

சிவகுருநாதபிள்ளைக்குப் பின்னர் ஒரு சில அதிபர்கள் பதவிக்கு வந்தனர் அவர்களுள் 1927ம் ஆண்டு திரு.க.அருணாசலம் அவர்கள் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்திலே தான் வட்டு இந்துக் கல்லூரி 1AB தர பாடசாலையாகத் தரமுயர்ந்து உயர்தர வகுப்பில் கணித விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. அக்காலத்தின் கல்வி மந்திரியாக இருந்த 'பதியுதீன் முகமது' அவர்களால் கல்லூரிக்கு தண்ணீர்த் தாங்கி நிர்மாணிக்கப்பட்டு மின்னிணைப்பும் பெறப்பட்டது. இதனால் கல்லூரி புதுப்பொலிவு பெற்றது. அத்தோடு கல்லூரிக்கு காணி நிலமும் கொள்வனவு செய்யப்பட்டது. கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ்.சுமதிபாலா மற்றும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் ஆகியோரைப் பாடசாலைக்கு வரவழைத்து கல்லூரியின் பௌதீக வளங்களை அதிகரிக்க அரும்பாடுபட்ட அதிபர் திரு.க. அருணாசலத்தின் காலமும் கல்லூரி வரலாற்றிலே சிறப்பான காலமாகும்.

இவரைத் தொடர்ந்து 1978இல் கல்லூரியின் அதிபராக திரு.க.நடராசா அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து திரு.எஸ். வேலுப்பிள்ளை, திரு. எஸ். தாஸ் என அடுத்தடுத்து அதிபர்களாக கல்லூரிக்கு நியமிக்கப்பட்டனர். திரு. எஸ்.தாஸ் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் தான் அருளம்பலம் என்னும் மாணவன் தனது பாடத்தொகுதியிலே அகில இலங்கையில் நான்காவதாக வந்து பரிசுத் தொகையை வென்று நேரடியாக ஜனாதிபதியிடம் அதனைப் பெற்று தனக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். இவரைத் தொடர்ந்து திரு.என்.ஜெயநாயகம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்திலே தான் கல்லூரி நூற்றாண்டு நிறைவை அடைந்து விழாவெடுத்து அகம் மகிழ்ந்தது. இதனைத் தொடர்ந்து 1995 இல் யாழ்ப்பாண இடப்பெயர்வு ஏற்பட்டு 1996இல் கல்லூரி மீண்டும் தனது பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

நூற்றாண்டு விழாவின் பின்னர் இக்கல்லூரியின் அதிபர் பொறுப்பை 1996இல் திரு. ச. இராமலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம் அப்பர் பெருமான் முத்தியடைந்த திருப்புகலூர்



**தேவாரப் பாடல்பெற்ற காவிரி தென்கரை சிவபுரங்களில் 75வது திருக்கோவில்**

**அமைவிடம் :** (நாகப்பட்டினம் மாவட்டம் – தமிழ்நாடு)

நன்னிலம் - நாகப்பட்டினம் சாலையில் உள்ள தலம். சாலையோரத்தில் கோயில் வளைவு உள்ளது. அதனுள் சென்றால் கோயிலை அடையலாம். நன்னிலத்தில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் திருப்புகலூர் தலம் இருக்கிறது. இத்தலத்திற்கு செல்வதற்கு நன்னிலம், சன்னா நல்லூர், நாகப்பட்டிணத்தில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன. திருப்புகலூருக்கு அருகில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருக்கண்ணபுரம் மற்றும் இராமனதீச்சுரம் என்ற பாடல் பெற்ற சிவத்தலமும் உள்ளது.

### தலத்தின் சிறப்புக்கள்

திருநாவுக்கரசர் இறைவனடி (முத்தி) அடைந்த தலம். அக்கினி பகவான் தவம் செய்து தன்னுடைய பாவங்கள் நீங்கப் பெற்ற தலமாகும். இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார் அருள்மிகு முருக நாயனார் அவதரித்த தலம். இத்தலத்து அம்பாள் கருந்தார் குழலி மிகவும் சிறப்பானவர். திருமணம் ஆகாத பெண்கள் வேண்டுதல் செய்து மாலைப் பொழுதில் வெள்ளை ஆடையினை சாற்றினால் திருமணம் கைகூடுவது நிச்சயம். ஒரே கோயிலுக்குள் திருநாவுக்கரசரும், சுந்தரரும் பாடிய இரு சன்னதிகள் உள்ளது.

**இறைவன் திருப்பெயர் :** அக்கினிபுரீசுவரர்
**இறைவியார் திருப்பெயர் :** கருந்தார் குழலியம்மை
**கோவில்மரம் :** புன்னை மரம்
**திருக்குளம் :** அக்கினி தீர்த்தம், பாண தீர்த்தம்
**பாமாலை:** திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர்

### திருஞானசம்பந்தர்

குறிகலந்தவிசை பாடலினான்நசை யாலிவ்வுல கெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடமொய்ம் மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே

### திருநாவுக்கரசர்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன், மற்றோர் களைகண் இல்லேன்,
சுழல் அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்,
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்,
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

### சுந்தரர்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்,
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிலோகம் ஆள்வற்கு
யாதும் ஐயறவு இல்லையே.

### கோவில் வரலாறு

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். திருநாவுக்கரசர் முத்தி அடைந்த தலம். அருள்மிகு முருக நாயனார் அவதரித்த தலம். அக்கினி பகவானுக்கு இத்தலத்தில் உருவம் உண்டு. முருக நாயனார் இத்தலத்தில் அவதரித்து வர்த்தமானேசுவரருக்கு பூத்தொடுத்து சேவை புரிந்துள்ளார். இறைவன் சுந்தரருக்கு செங்கற்களை பொன் கற்களாக்கி தந்த அற்புதம் நிகழ்ந்த தலம். காலசம் கார மூர்த்தி இங்கு தனியாக மூலவராக எழுந்தருளியுள்ளார். இக்கோயில் சோழர்களால் கட்டப்பட்டது. சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்நாளில் அடிக்கடியோ அல்லது சதயம் நட்சத்திர நாளிலோ வழிபாடு செய்ய வேண்டிய தலம். அசுர வம்சத்தைச் சேர்ந்த பாணாசுரனின் தாயார் மாதினியார். இவர் செய்யும் சிவ பூசைக்காக அவர் இருக்கும் இடத்திலேயே தினமும் புதுப்புது சுயம்பு லிங்கங்களை கொண்டு வந்து சேர்ப்பது பாணாசுரனின் வழக்கம். ஒருமுறை திருப்புகலூரில் ஏராளமான லிங்கங்கள் இருப்பதை பார்த்தான். அதில் சுயம்புலிங்கத்தை எடுத்து சென்று தாயாரிடம் ஒப்படைக்க நினைத்து கோயிலை சுற்றிலும் அகழி தோண்டி லிங்கத்தை எடுக்க முயன்றான். அகழி முழுவதும் தண்ணீர் நிரம்பியதே தவிர லிங்கம் பெயரவில்லை. என்ன செய்வது என தெரியாமல் தன் உயிரை விட நினைத்தான். அப்போது விண்ணில் அசரீரி தோன்றி பாணாசுரனே! உனது தாயாரின் பூசைக்கு நாம் எழுந்தருள்வோம் எனக் கூறி மறைந்தது. தலையில் புன்னை மலருடன் அவனது தாயார் வழிபட்ட இடத்துக்கு சென்றது லிங்கம். பூசை முடிந்ததும் திருப்புகலூருக்கே லிங்கம் திரும்பி விட்டது.



சிவத்திரு குமரேசன் இராஜசிம்மன்

ஒரு முறை வாயு, வருணன், அக்கினி ஆகிய மூவருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டதில் அக்கினி பகவான் மறைந்து போனார். இதனால் உலகில் யாகம் முதலியன நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. உணவு உள்ளிட்ட அனைத்தும் நின்று போயின. மிகுந்த துன்பத்திற்குள்ளான முனிவர்களும் தேவர்களும் இதிலிருந்து விடுபட லிங்கபூசை செய்தனர். அவரது உத்தரவுப்படி அக்கினி பகவான் மீண்டும் வந்தார். அவருக்கு இரண்டு முகம், மூன்று பாதம், நான்கு கொம்பு, ஏழு கை, ஏழு சுவாலையுடன் சிவன் ஒரு உருவத்தையும் படைத்தார். அக்கினி பகவானுக்கு அருள் புரிந்தமையால் இறைவனுக்கு "அக்கினி புரீசுவரர்' என்ற பெயர் ஏற்பட்டது. அக்கினி புரீசுவரர் கோயிலின் நான்கு புறமும் அகழி சூழ்ந்திருந்தது. கோயிலுக்குள் செல்ல வழியில்லாததால் முன்பகுதி அகழியை தூர்த்து வழி ஏற்படுத்தினர். இராஜராஜன் காலத்து கல்வெட்டுகள் இருப்பதன் மூலம் தொன்மையான கோயில் என்று தெரிய வருகிறது. இத்திருத்தலம் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி ஆகியோரால் பாடல் பெற்றது. இந்தக் கோயில் 3ம் நூற்றாண்டு கோயிலாக இது இருக்க வேண்டும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தலத்தில் நிலைய அமைப்பு (வாஸ்து) பூசை செய்வது மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இத்தலத்தில் சுந்தரருக்கு செங்கற்களை பொன்கற்களாக மாற்றி கொடுத்து அருளியதாலும் அக்கினி பகவான் தன்னுடைய துன்பங்கள் நீங்கப் பெற்றதாலும் புதியதாக வீடு கட்டுபவர்கள் இத்தலத்திற்கு வந்து செங்கல் வைத்து மனையாரம்பம் செய்த பிறகே வீடுகட்ட ஆரம்பிப்பது வழக்கம்.

### திருநாவுக்கரசு நாயனார் - முத்தி

திருநாவுக்கரசு நாயனார் தனது 81 வது வயதில் இத்தலத்தில் உழவார பணி செய்தபோது இறைவன் சித்திரை சதய நன்னாளில் நாளில் முத்தி கொடுத்தார். முத்திபெறும் திருக்கோவில்களில் இதுவும் ஒன்றாகும். அப்பருக்கு தனிச் சந்நிதி உண்டு. இங்கு சித்திரை சதயத்தை ஒட்டி பத்து நாட்கள் திருவிழா நடக்கிறது. அப்பர் சித்திரை சதயம் நான்காம் சாமத்தில் இறைவனிடம் சோதியில் கலக்கும் போது பக்தர்கள் கண்ணில் நீர் வழிய வழிபடுவது கண்கொள்ளாக் காட்சி ஆகும். ஒரே கோயிலுக்குள் திருநாவுக்கரசரும், சுந்தரரும் பாடிய இரு திருமுன்கள் உள்ளன். இங்கு இறைவன் அக்கினிபுரீசுவரர். இவருக்கு கோணபிரான் என்ற பெயரும் உண்டு. இறைவி கருந்தார் குழலியம்மை. மற்றொரு சன்னதியின் இறைவன் வர்த்மானேசுவரர். இறைவி மனோன்மணி அம்மை. 63 நாயன்மார்களில் முருக நாயனார் இத்தலத்தில் அவதரித்துள்ளார்.

சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்களது சனிக்கிழமைகளில் வரும் சதய நட்சத்திர நாளில் இத்தலத்தில் வழிபாடு செய்தால் நீண்ட ஆயுளும், நல்ல உடல்நிலையும் , நற்பண்புகள் வந்து சேரும். திருவாரூரில் பங்குனிப் பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் மிகச் சிறப்பாக நடைபெறும். ஒரு சமயம் அவ்வாறு பங்குனி விழாவின் போது தனது மனைவி பரவையார் செலவிற்குப் பொன் பெற விரும்பி சுந்தரர் திருப்புகலூர் வந்தார். திருப்புகலூரில் கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்கி தனது கருத்தைப் பதிகத்தில் வைத்துப் பாடினார். பிறகு மற்ற அடியார்களுடன் கோவிலில் சிறிது நேரம் இளைப்பாறினார். தூங்குவதற்காக அங்கிருக்கும் செங்கற்களை தலைக்கு உயரமாக வைத்துத் தம் மேலாடையாகிய வெண்பட்டை விரித்துப் படுத்தார். துயில் நீங்கி சுந்தரர் எழுந்தபோது தம் தலையணையாக வைத்திருந்த செங்கற்களெல்லாம் பொற்கட்டிகளாக மாறி இருக்கக் கண்டு வியப்படைந்தார். இறைவனை 'தம்மையே புகழ்ந்து" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி வணங்கினார்.

இங்குள்ள அம்பாளுக்கு கருந்தார் குழலியம்மை என்றும் சூளிகாம்பாள் என்றும் பெயர்கள் உண்டு. இவர் தன் பக்தையின் மகளுக்கு பிரசவம் பார்த்ததாக வரலாறு உள்ளது. கர்ப்பிணிகளுக்கு குழந்தைப்பேறு எந்தவித தடையுமின்றி நடைபெற அம்பாளை வழிபட்டு பலனடையலாம். மாலைக் காலத்தில் இராஜராயேசுவரி கோலத்தில் அம்பாள் வெள்ளைப்புடவை அணிவது வழக்கம். திருமணமாகாத பெண்கள் அம்பாளுக்கு வெள்ளைப்புடவை சாத்தினால் திருமணம் கைகூடுவதாக நம்பிக்கையுள்ளது. திருமண வரம் வேண்டுவோர் சுவாமி அம்பாளுக்கு கல்யாண மாலை சாத்தி அர்ச்சனை செய்கிறார்கள். சூளிகாம்பாள் என்னும் பெயருடைய இந்த பெருந்தகையாள் தெற்குப் பார்த்த முகமுடையாள். கருந்தாள் என்று எல்லோராலும் கருதப்படுவாள். நளச் சக்கரவர்த்திக்கும் சனைச்சர பகவானுக்கும் ஒரே திருமுன் உண்டு.

### கோவில் அமைப்பு

மூவர் பாடல் பெற்ற தலம் என்ற பெருமையுடைய திருப்புகலூர் அக்னீசுவரர் ஆலயம் ஆகும். கோவிலின் பரப்பளவு சுமார் 73000 சதுர அடிகள். கிழக்கு - மேற்கு மதில் சுவர் நீளம் 325 அடி. வடக்கு - தெற்கு மதில் சுவர் நீளம் 225 அடி. கோவில் மதில் சுவரை ஒட்டி வெளிப்புறத்தில் நான்கு பக்கமும் அகழி இருக்கிறது. மூலவர் அக்கினிபுரீசுவரர். திருமுன் உள்ள நுழைவு வாயிற்கோபுரம் ஐந்து நிலைகள் உள்ளதாகவும் சுமார் 90 அடி உயரமும் கொண்டுள்ளது. உள்ளே நுழைந்ததும் நாம் முதலில் காண்பது இறைவி கருந்தார் குழலியம்மையின் தெற்கு நோக்கிய திருமுன். இந்தத் திருமுன்னை ஒட்டியே மூலவர் அக்கினிபுரீசுவரர் எழுந்தருளியுள்ளார். சுயம்புலிங்கமான மூலவருக்கு கோணபிரான் என்ற பெயரும் உண்டு. மூலவருக்குப் பக்கத்தில் சந்திரசேகரருக்குத் தனி திருமுன் உள்ளது. இங்கு இவரே பிரதானமாவார். பரிவார மூர்த்தங்களாக விநாயகர், நடராசர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, பிட்சாடனர், ஆலிங்கன கல்யாண சுந்தரர் முதலிய மூர்த்தங்கள் உள்ளன. மூலவர் திருமுன் வடக்கே வர்த்தமானீசுவரர் எழுந்தருளியுள்ளார். அவருடைய துணையார் மனோண்மணி அம்மைக்கும் தனித் திருமுன் இருக்கின்றது. இந்த வர்த்தமானீசுவரரைப் பாராட்டி சம்பந்தர் தனியாக ஒரு பதிகம் பாடி இருக்கிறார். மூலவரைச் சுற்றியுள்ள உட்பிரகாரத்தில் சந்திரசேகரர் திரிபுராந்தகர், அக்கினி, பிரம்மா ஆகியோரின் செப்புச் சிலை வடிவங்களைக் காணலாம். ஒன்பது கிரகங்கள் இங்கு மற்ற கோவில்களில் இருப்பதைப் போல் இல்லாமல் "ட" என்ற அமைப்பில் இருக்கிறார்கள்.

கோவில் செல்வதற்கான உதவி மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயண கட்டுரை ஆசிரியரை தொடர்பு கொள்ளலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
**உதவிப் பேராசிரியர்**
SRM **கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
+919003296221 | easanaithedi.in

## அம்பலவாண நாவலரின்...

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

தற்துணிவும், ஊக்கமும் மிக்க இவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். இவரது காலத்திலே தான் கல்லூரிக்கு புதிதாக மாடிக்கட்டடங்கள் வந்தன. ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் உதவியால் கல்லூரியின் தெற்கு மாடிக் கட்டடங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டன. இதுமட்டுமன்றி கனணி அறை, புதிய நிலக்கொள்வனவு, விளையாட்டு மைதான புரனமைப்பு எனப் புதுப்பொழிவு பெறத் தொடங்கியது. கல்லூரியின் நிறுவுனர் அம்பலவாண நாவலரது சிலையும் கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்டது. அத்தோடு சிறந்த ஆசிரிய ஆளனி வளங்களை கல்லூரிக்கு கொண்டு வந்து கல்வி முன்னேற்றத் திற்கும் வழியமைத்ததோடு, மாணவர்களிடம் சிறந்த ஒழுக்க கட்டுப்பாடு ஏற்பட வழி காட்டினார். இவரின் இத்தகைய செயற்பாடுகளுக்கு அப்போதைய உப அதிபர் வே. குணபாலசிங்கம் அவர்கள் உறுதுணையாக இருந்தமை இராமலிங்கம் அதிபர் அவர்களை ஊக்கப்படுத்தியது. அதிபர் ச.இராமலிங்கத்தின் காலம் கல்லூரி வரலாற்றில் முக்கியமான காலமாகும்.

அதிபர் ச.இராமலிங்கம் ஒய்வு பெற்றதை தொடர்ந்து திருமதி ஜெ. அருள்மயம் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து தி. சிவகணேசசுந்தரன் என அடுத்தடுத்து கல்லூரியின் அதிபர்களாக நியமனம் பெற்றனர். திரு. சிவகணேசசுந்தரன் காலத்திலே எமது கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கப்பட்டது. நவோதைய கட்டடிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதிபர் திரு. சிவகணேசசுந்தரை தொடர்ந்து 2011ஆம் ஆண்டு கல்லூரியின் அதிபராக திரு.சி. தனஞ்சயன் அவர்கள் நியமிக்கப்பட்டார் இவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். அதிபர் திரு. சி. தனஞ்சயன் அவர்கள் இரவு பகல் பாராது கல்லூரிக்காக உழைத்தார். இதன் பயனாக உயர்தரப் பிரிவில் தொழில் நுட்ப பீடம் எமது கல்லூரிக்கு கிடைத்தது இதனால் எமது கல்லூரி சங்கானைக் கோட்டத்தில் ஓர் முதன்மை பாடசாலையாகத் திகழ்ந்தது. இவரது காலத்தில் ஜனாதிபதி அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களும் அவரோடு அப்போதைய கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன அவர்களும் 2014 இல் கல்லூரிக்கு வருகை தந்திருந்தனர். இத்தகைய செயற்பாடுகளால் கல்லூரி அழகும் புதுப்பொழிவும் பெற்றது. சிறந்த ஆசிரிய ஆளனியை இக்கல்லூரியில் ஏற்படுத்தி கல்வி மேம்பாட்டிற்காக உழைத்ததோடு வட்டு இந்துக் கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த வேண்டும் என்று பூர்வாங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்.

இவரைத் தொடரந்து திரு. ந. தனபாலசிங்கம் அவர்கள் 2015 தொடக்கம் 2017 வரை அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரது காலத்திலே தான் வடக்கு புதிய மாடிக் கட்டிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது இவர் ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் அதிபர் பொறுப்பை திரு. சி. தனஞ்சயன் அவர்கள் ஏற்றுக் கொண்டார். 2019 இல் இவர் இடமாற்றம் பெற்று செல்ல தற்போது கல்லூரியின் அதிபராக திரு. அ.ஆனந்தராஜா அவர்கள் நியமிக்கப்பட்டு பாடசாலை சிறந்த முறையில் வழிநடத்தப்பட்டு வருகின்றது. விரைவில் இப்பாடசாலை தேசிய பாடசாலை என்ற நிலையை அடைய இருப்பது இக்கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்க்கின்றது.



# பரிபாடல் வையைப் பாடல்களில் நீர்ப்பண்பாடு

கலாநிதி
சு.குணேஸ்வரன்

(கடந்த மாதத் தொடர்ச்சி)

## 1. வையை வரவும் வளமும்

'வளி பொரு மின்னொடு வான் இருள் பரப்பி
விளிவு இன்று, கிளையொடு மேல் மலை முற்றி,
தளி பொழி சாரல் ததர் மலர் தாஅய்
ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்,
அகரு வழை, ஞெமை, ஆரம், இனைய,
தகரமும் ஞாழலும் தாரமும் தாங்கி
நளி கடல் முன்னியது போலும், தீம் நீர்
வளி வரல் வையை வரவு' (பரி. 12: 1-8)

என்று வையையில் கடல்போல் நீர் பெருகி வந்த காட்சி சொல்லப்படுகிறது. மண்ணிலுள்ள நீர் ஆவியாகி மேகமாகத் திரண்டு மழையாகப் பொழிகிறது. மின்னலும் இருளுமாக மாறிமாறித் தோன்றி சைய மலையில் பெய்த மழை வையை ஆற்றில் காற்றினால் உதிர்ந்த மலர்களைப் பரப்பியும் நாகம், அகில், சுரபுன்னை, ஞெமை, சந்தனம், ஆகிய மரங்கள் வருந்துமாறும் தகரம், ஞாழல், தேவதாரம் ஆகிய மரங்களைச் சாய்த்து அடித்துக்கொண்டு வந்தது. இவ்வாறு வருகின்ற வையையானது பெரிய கடல் பொங்கி வருவதைப்போல இருந்தது என புலவர் வையையின் வரவைக் குறிக்கின்றார்.

வையையாறு நறுமணத்தோடு ஓடி வருகின்றது. அந்த நறுமணம் நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ ஆகிய நால்வகைப்பூக்களையும் சுமந்து வருவதால் ஏற்பட்டது. அதுவே வையை ஆற்றின் பொதுநாற்றம் என பரிபாடல் குறிப்பிடுகிறது. இது எப்படியிருக்கிறது என்றால் மணப்பொருள் பலவற்றைக் கலந்து உருவாக்கப்படும் மணக்கலவை நூல்களில் சொல்லப்பட்ட விதிமுறையின்படி கலக்கப்பட்ட மணத்தைப்போல வையை ஓடுகிறது. அதில் நீராடும் ஆடவரும் மகளிரும் மேலும் நறுமணப்பொருட்களை தமது உடலில் பூசிக்கொண்டு நீராடுவதால், எல்லாம் சோர்ந்து புதிய மணத்தைப் பரப்பியது என்று கூறப்படுகிறது. இவ்வாறு வையை ஆற்றின் வரவு சொல்லப்படுகிறது.

'ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டு வழி நடந்து, தாங்கு தடை பொருது,
விதி ஆற்றான் ஆக்கிய மெய்க்கலவை போலப்
பொது நாற்றம் உள்உள் கரந்து, புது நாற்றம்
செய்கின்றே, செம்பூம் புனல்.' (பரி 7: 17-22)

அதற்கு மேலாக ஆற்றில் நீராடும் பலதிறத்தவரும் குறிப்பாக மகளிரும் ஆடவரும் பல்வகை நறுமணப் பொடிகளை உடம்பில் பூசி நீராடுகின்றனர்.

வானத்தில் இருந்து கங்கை ஆறு ஒழுகுவதுபோல வையை வானக்கங்கையை ஒத்து விளங்கியது எனவும் வள்ளல்தன்மைமிக்க பாண்டியனது ஈகைபோல வையையின் நீர்வரவு இருந்ததெனவும் வையையின் வரவு பாடப்படுகிறது. சையமலையில் உருவான வையை வையைக்கரைக்கண் இருந்த சிறப்பான நீராடுதுறையான திருமருதமுன்துறையிலே மக்கள் புகுந்து சிறப்பாக நீராடும் காட்சிகள் மிக விரிவாக விபரிக்கப்படுகின்றன. இவ்வாறு மலையிலே பிறந்த வையை நதி பண்டைக்காலத்தில் 'வையை மடுத்தாற் கடலென' (பரி 20: 42) அடிகளின் ஊடாக கடலில் கலந்த காலம் இருந்ததென்பதை புலப்படுத்துகிறது. வையையின் வரவு மதுரையின் வளத்தின் குறியீடாகப் பார்க்கப் படுகின்றது. அது பலவாறாக விரிவடையக்கூடியது. மதுரையின் செழிப்பும் மக்களின் மகிழ்ச்சியுமாக அமைகின்றது. அது ஓடும் இடங்கள் எல்லாவற்றையும் வளப்படுத்திக் கொண்டு செல்கின்றது. மற்றும் வழிபாட்டு மரபின் அடியாகவும் வையையின் வரவு குறிப் பிடப்படுகின்றது.

## 2. நீராடுவோர் இயல்புகளும் நீர்ப்பண்பாடுகளும்

வையையில் புதுவெள்ளம் வந்ததும் மக்கள் குதிரைகளிலும் யானைகளிலும் கோவேறு கழுதைகளிலும் பல்லாக்குகளிலும், மற்றும் நடந்தும் நீராடச் செல் கின்றனர்.

புதுப்புனலாடச் செல்லும் மகளிர் எடுத்துவரும் பொருட்களும் தங்கள் ஆடவரை அணியச் செய்யும் ஆடை வகைகளும் கூறப்படுகின்றன. நீரில் விளையாடுவோரும், தம் தலைவரோடு ஊடல் கொள்ளும் தலைவியரும், முகைப்பருவத்து மகளிர் தாம் விரும்பும்



காதலர் தம்மை வந்து சேருமாறு காத்திருத்தலும், காமவயப்பட்ட ஆடவரும் மகளிரும் ஊரார் பழி தூ ற்றுவர் என்று எண்ணி மறைந்து நிற்றலும் வாழைத் தண்டின்மேல் படுத்து விளையாடும் ஆடவரும், பந்து கவருவோரும், சிற்றில் விளையாடும் பெண்களிடம் சிறுசோற்றுக்கு கையேந்துதல், முதலானவையும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இவ்வாறு நீராடி தம் இல்லம் திரும்பும்போது ஆடியும் பாடியும் செல்கின்றனர். அவர்கள் செல்லும்போது மாடங்களில் இருந்து எழுந்த அகில் புகையும் வண்டுகளின் ரீங்காரமும் ஒன்று சேர்ந்தன. இவ்வாறு வையையில் இடம்பெறும் ஒன்பது பாடற்பகுதிகளும் தனித்தனியே வையையின் வரவையும் புனலாட்டத்தில் ஈடுபடும் மாந்தர்களின் இயல்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

வையை ஆற்றில் இடம்பெற்ற நீராட்டத்தில் நீர்விளையாட்டுக் கருவிகளை அக்கால மக்கள் பயன்படுத்திய செய்திகள் கிடைக்கின்றன. இவர்கள் அன்று போர்க்களத்திற்குக் கருவிகள் கொண்டு சென்றதுபோல பல கருவிகளையும் எடுத்துச் சென்றனர். அவற்றில் நீர் விளையாட்டுக்குரிய நெய் பூசப்பட்ட சிவிறி, வண்ணத்திரவம் நிரப்பி அல்லது குருதியைப்போன்ற அரக்கு நிறமுடைய நீரை அடைத்த நீரெக்கி, வாசனை நீர் அடைக்கப்பட்ட கொம்பு, மூங்கில் குழாய், வண்ணக்கலவைகளை நிரப்பி ஒருவர் மீது மற்றவர் வீசியெறியும் வட்டுக்கள் ஆகியன நீர்விளையாட்டுக்குரிய கருவிகளாகக் குறிக்கப்படுகின்றன.

'நெய்ம்மாண் சிவிறியர் நீர் மணக்கோட்டினர் (பரி. 6:25)
'நெய்த்தோர் நிற அரக்கின் நீரெக்கி (பரி. 10:12)
'வண்ண நீர் கரந்த வட்டு விட்டு எறிவோரும் (பரி. 11)

இதன் இன்றைய நிலைபற்றிய கூற்று ஒன்றையும் இங்கு தொடர்புபடுத்திக் காட்டத்தக்கது.

'துருத்தியில் நீர் பீய்ச்சுதல் எனும் நிகழ்வு பல நூற் றாண்டுகளாய் அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்வோடு தொடர்புடையது. அழகர் மதுரைக்கு வரும் காலம் கோடைக்காலமாக இருப்பதால், கோடையைத் தணிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்தத் தண்ணீர் பீய்ச்சும் சடங்கு. ஆடு அல்லது மாட்டுத் தோலைப் பைபோல எடுத்த நான்கு புறமும் தைத்து ஒரு மூலையில் பீச்சாங்குழலைச் செருகி விடுவர். நீர் நிரம்பிய துருத்தியை அழுத்தும்போது பீய்ச்சாங்குழல் வழியாகத் தண்ணீர் விசையோடு வெளிவந்து நீர்த்தூவல் நிகழ்த்தும்........ .....மதுரையில் வையையாற்றில் புதுப்புனல் வரும்போது நீராடச் செல்பவர்கள் இவ்வகை நீர்பாய்ச்சும் கருவிகளை வைத்து விளையாடுவதைப் பரிபாடல் இலக்கியம் பலபட எடுத்துரைக்கின்றது. இக்கருவிக்கு நீரெக்கி, சிவிறி, துருத்தி என்று பெயர். நீரை எக்கி வீசுவதாலும், சிவிறப் பரப்புவதாலும், துருத்தி அடிப்பதாலும் இக்கருவிக்கு இப்பெயர்கள் வந்தன.' (4)

இவ்வாறாக வையையில் இடம்பெற்ற புனல் விளையாட்டில் பயன்படுத்த நீர் விளையாட்டுக்கருவிகள் பற்றிய குறிப்பு பரிபாடலிலேயே அதிகம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சங்ககால மகளிர் தங்கள் கூந்தலை அழகுபடுத்துதலை சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. மகளிர் தங்கள் கூந்தலை ஐந்து வகையாக அழகுபடுத்துவர். அதனை ஐம்பால் என அழைப்பர். முடி (கூந்தலை உச்சியில் கூட்டி முடிதல்), கொண்டை (பக்கவாட்டில் முடிதல்), சுருள் (பின்னிச் செருகுதல்), குழல் (சுருட்டி முடிதல்) பனிச்சை (சடையாகப் பின்னுதல்) என்று குறிப்பிடுவர். பரிபாடலில் 'கார்கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்' (பரி 12-15) என்ற பரிபாடல் அடியினூடாக கூந்தலைக் குழலாக முடிப்பதைக் கதுப்பு என்று குறிக்கின்றனர்.

நீர்ப்பண்பாடுகளில் வையையில் தைநீராடல் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. திருமணமாகாத கன்னிப்பெண்கள் தங்கள் தாயாருடன் சென்று சடங்குமுறைகளை அறிந்த மூத்த பார்ப்பணியர் கூறியபடி



நீராடுதல் தைநீராடல் எனப்படும். இவ்வாறு நீராடினால் அவர்களின் வேண்டுதல் பலிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. எனவேதான் இப்பிறவியில் நீராடக்கிடைத்தது தாங்கள் முற்பிறவியில் செய்த பலன் என்றும் மறுபிறவியிலும் இப்பேறு நிலைக்கவேண்டும் என்று வேண்டுகின்றனர். இதனையே

'முன்முறை செய் தவத்தின் இம்முறை இயைந்தேம்
மறுமுறை அமையத்தும் இயைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே' (பரி 11:138-140)

கல்வி கற்கத் தொடங்கும் இளம்புலவர் மை தடவப்பெற்ற சுவடிகளைக் கையிலேந்திப் பயிலும் மையாடல் பற்றிய செய்தியும் சொல்லப்படுகிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம் - 4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | |
| | | 3 | | | | | |
| 4 | | | | | 5 | | |
| | | 6 | 7 | | | | |
| | 8 | | | | | | |
| 9 | | | 10 | 11 | | | |
| 12 | | 13 | | | | | |
| | | | | 14 | | | |

**இடமிருந்து வலம்**

*1. முதலாம் தமிழ் சங்கம் அமைந்த இடம்*
*2. செல்வம்*
*3. ஆறுபடை வீடுகளில் ஒன்று*
*4. மழைக்குரிய கடவுள்*
*5. நட்சத்திரங்களில் ஒன்று*
*6. பிரணவ மந்திரம் (திரும்பி)*
*9. ‘.............’ சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்’ - திருவாசகம்*
*10. கலைந்தாடும் சடாமுடியை இப்படிச் சொல்வார் (குழம்பி)*
*12. பெண்ணுக்கு கண்கண்ட தெய்வம்*
*15. வாசலில் வைத்து வரவேற்பது*

**மேலிருந்து கீழ்**

*1. கடவுள்*
*2. மாதம்*
*3. இது என்றால் பிணமும் வாய் திறக்கும்.*
*5. திருக்கேதீச்சரம் அமைந்துள்ள மாவட்டம்*
*7. திருக்கோயிலில் திருமுறைகளை எப்போதும் பாடி இறைபணி செய்பவர்கள்.*
*8. முல்லைத்தீவு வற்றாப்பளையில் கோயில் கொண்டவர்*
*9. விளையாட்டுக் கருவி*
*11. மங்கல இசைக்கருவி*
*13. வைரவருக்கு படையல் இடுவது*

இக்குறுக்கெழுத்து சட்டகத்தைப் பூர்த்திசெய்து பெயர், முகவரி, தொடர்பு இலக்கத்துடன் அனுப்பி வைக்கும் வாகசர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
25.02.2021

**அனுப்பவேண்டிய முகவரி:**
தென்னாடு, செந்தமிழாகம சிவமடம்,
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

**இரண்டாவது குறுக்கெழுத்துப் போட்டி வெற்றியாளர்**
**செல்வி.அஸ்வினி சுதாகர், வல்லாவத்தை கம்பர் மலை.**

## சொற்சிலம்பம் - 3இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ல் | லா | வ | 2 ம | ர | ம் | |
| ல | | 3 ப | ய | ன் | | 4 ம | தி |
| 6 ச | த் | தி | | 7 ம | ரு | | ரு |
| ம் | | | | 8 த | லை | 9 நி | வ |
| | 10 கூ | த் | த | ன் | | ல | ள |
| 11 அ | ந் | த | ம் | | | வு | ளு |
| 12 மு | த | ல் | | 13 எ | லி | | வ |
| கு | ல் | | 14 தி | ரு | மூ | ல | ர் |

# உண்ண உணவும், உடுக்க உடையும் குறைவின்றிக் கிடைக்க பாடவேண்டிய திருப்புகலூர்ப் பதிகம் - “தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்”



**திருப்புகலூர் அக்கினிபுரீசுவரர் கோயில்**
**இறைவன் :** *அக்கினிபுரீசுவரர், கோணபிரான்*
**இறைவி :** *கருந்தாழ் குழலி*
**பண் :** *கொல்லி* **இராகம் :** *நவரோசு*

**சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய**
**திருப்புகலூர்ப் பதிகம்**
*திருச்சிற்றம்பலம்*

1. தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும், ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிலோகம் ஆள்வற்கு யாதும் ஐயறவு இல்லையே.

2. மிடக்கு இலாதானை “வீமனே, விறல் விசயனே, வில்லுக்கு இவன்”என்று
கொடுக்கிலாதானைப் “பாரியே”என்று கூறினும் கொடுப்பார் இல்லை
பொடிக்கொள் மேனி, எம் புண்ணியன், புகலூரைப் பாடுமின் புலவீர்கள்
அடுக்குமேல் அமர் உலகம் ஆள்வதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

3. “காணியேல் பெரிது உடையனே, கற்று நல்லனே, சுற்றம் நல்கிளை
பேணியே, விருந்து ஓம்புமை” என்று பேசினும் கொடுப்பார் இலை
பூணி பூண்டு உழப்புள் சிலம்பும், தண் புகலூர் பாடுமின், புலவீர்கள்
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு, யாதும் ஐயறவு இல்லையே.

4. நரைகள் போந்து மெய் தளர்ந்து, மூத்து, உடல் நடுங்கி நிற்கும் இக்கிழவனை
“வரைகள் போல், திரள் தோளனே” என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புரைவெள் ஏறு உடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின், புலவீர்கள்
அரையானாய் அமலருககம் ஆள்வதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

5. வஞ்ச நெஞ்சனை, மா சழக்கனைப் பாவியை, வழக்கு இலியைப்
பஞ்ச துட்டனைச், ‘சாதுவே’ என்று பாடினும் கொடுப்பார் இலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணியன், புகலூரைப் பாடுமின், புலவீர்கள்
நெஞ்சில் நோய் அறுத்து, உஞ்சுபோதற்கு யாதும் ஐயறவு இலலையே.

6. நலம் இலாதானை, “நல்லனே” என்று நரைத்த மாந்தரை, “இளையனே”
குலம் இலாதானைக் “குலவனே” என்று கூறினும் கொடுப்பார் இலை
புலம் எலாம் வெறி கமலும் பூம் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்
அலமராது அமருகலம் ஆள்வதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

7. நோயனைத், “தடந்தோளனே” என்று, நொய்ய மாந்தரை, “விழுமிய
தாய் அன்றோ புலவோர்க்கு எலாம்” என்று சாற்றினும் கொடுப்பார் இலை
போய் உழன்று கண் குழியாதே, எந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள்
ஆயம் இன்றிப் போய், அண்டம் ஆள்வதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

8. எள் விழுந்த இடம் பார்க்கும் ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
“வள்ளலே, எங்கள் மைந்தனே” என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புள் எலாம் சென்று சேரும் பூம் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்
அள்ளல் பட்டு அழுந்தாது போவதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

9. கற்றிலாதானைக் “கற்று நல்லனே” “காமதேவனை ஒக்குமே”
முற்றிலாதானை, “முற்றனை” என்று மொழியினும் கொடுப்பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயறவு இல்லையே.

10. தையாலருக்கு ஓர் காமனே” என்று “சால நல் வழக்குடையனே
கைஉலாவிய வேலவேன” என்று கழறினும் கொடுப்பார் இலை
பொய்கை ஆவியில் மேதிபாய் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்
ஐயனாய் அமலருகம் ஆள்வதற்கு, யாதும் ஐயறவு இல்லையே.

11. செறுவினில் செழும் கமலம் ஓங்கு தென் புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன், வனப்பகை அப்பன், சடையன் தன்
சிறுவன், வன் தொண்டன், ஊரன், பாடிய பாடல் பத்து இவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு, யாதும் ஐயறவு இல்லையே.

*திருச்சிற்றம்பலம்.*

**திருப்புகலூர் செல்லுங்கள்:**

*கல்லுள் தேரைக்கும் கருவுள் சிசுவிற்கும் உணவளிக்கும் இறைவன் உங்களுக்கும் உணவும், உடுக்க உடையும் தந்து வாழ்வினை வளமாக்கி யுள்ளதால் இயலுமாயின் திருப்புகலூர் சென்று அக்கினிபூரீசன் மற்றும் கருந்தாழ் குழலி அம்மையையும் வழிபட்டு வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல திருவருள் கைகூடட்டும்.*

**தைப் பொங்கல் தமிழர் வருடப்பிறப்பு அல்ல...**
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*(1) தமிழர்கள் சூரியனை மட்டும் வைத்து காலத்தினை கணித்தனரா? தமிழர் அறிவியல் கணிப்புகள் அண்டத்தில் உள்ள அனைத்தையும் வைத்தே இருந்தது. பண்டைத்தமிழர் அறிவியலின் ஆழத்தினை இன்னும் அறியமுடியாமல் இருப்பது துயரம்.*

*(2) சங்க இலக்கியங்களில் எங்காவது தைப் பொங்கல் பற்றியோ, அதுதான் தமிழர் வருடப்பிறப்பு என்றோ குறிப்புகள் உள்ளனவா ? மார்கழி , தை நீராடலே தமிழரின் நீர்ப் பண்பாடாக விபரிக் கப்படுகிறது.*

*(3) தமிழர்கள் சூரியன் , சந்திரன் (திதி / பிறைநாள்) மற்றும் நாண்மீன்களின் அடிப்படையில் தான் காலத்தினை கணித்தனர். அப்படியிருக்கையில் வெறுமனே சூரியனின் அசைவில் புத்தாண்டு கொண்டாடுவானா ?*

*(4) தமிழர் ஓரையில்* (Tamilar Zodiac), *தை என்பது சுறவம் / மகரம். என்ன காரணதிற்காக நடுவிலே வருடப்பிறப்பு ? மேழம் தானே தொடக்கம்.*

*(5) தமிழர் ஓரையில்* (Tamilar Zodiac) *சித்திரை இளவேனில் காலத்தில் புதுவருடம் வராமல் ஏன் முன்பனி கடைசியில் புதுவருடம் ?*

*(6) ஆடு என்ற சொல்லில் இருந்தே ஆண்டு வந்திருக்கிறது. ஆகவே ஆடு என்பது மேழம் எனும் குறியீடுதான். இது இளவேனில் சித்திரையே. இப்படியிருக்கையில் தையில் எப்படி வருடம் பிறக்கும்?*


*(7) தமிழர் அறிவியல் மாபெரும் அறிவியல். ஒரு மனிதனையே, தேவரையோ வைத்து அவருக்கு முன், அவருக்கு பின் என்று ஆண்டுகளை கணிக்க வில்லை. மாறாக ஊழிக்கு முன், ஊழிக்குப் பின் என்று மிகப்பெரிய கால அளவினை கணிப்பில் எடுத்த மாமேதைகள். இப்படிபட்ட ஆழ்ந்த அறிவாளி கள் தையை எப்படி தொடக்கமாக எடுப்பார்கள்?*

*(8) முன்னர் குறிப்பிட்டது போல் ஆண்டுப் பிறப்போ, நேரமாற்றமோ, காலமாற்றமோ உணரப் படவேண்டியவே தவிர கடிகாரத்தில் பார்ப்பவை அல்ல. தையில் ஆண்டு பிறக்கிறது என்பதை உங்களால் உணரமுடியுமா ?*

*இவற்றிற்கான பதில்களை ஆராய்ந்து , தமிழரின் அறிவியலை ஆழமாக அணுகி அதிலிருந்து முடிவிற்கு வாருங்கள். எங்கள் பெருமைகளை எங்களிடம் கேளுங்கள். எங்களைப் பற்றி வந்தவர்கள் சொல்லக் கேட்டுவிட்டு , எங்கள் பெருமைகளை சீரழிக்காதீர்கள். எங்களிடம் இருந்து போனவை, எடுத்தவை மீண்டும் வடக்கில் இருந்து வரும்போது வெறுமனே அவற்றினை சாயம் பூசி ஒதுக்காதீர்கள். சிந்தித்து செயற்படுங்கள்.*

*தமிழையும் , சமயத்தினையும் (சைவம்) பிரித்து, தமிழைப் பொதுவுடைமையாக்கி, தமிழின் பெருமை களை அறியாமல் அவற்றினை சிதைத்து, அதன் வயதினை, பெருமைகளைக் குறைத்துக் காட்டக் கூடியவாறு வடமொழிச் சாயம் பூசி சொற்களை மற்றும் மரபுகளை ஒதுக்கி, நாவினால் ஒரு நாடகமாடி நல்ல தமிழிலே மேடையில் பேசி, தங்கள் தான் தமிழர்கள் என்று கூடநின்று குழிபறிப்பவர்களை இனம்கண்டு ஒதுக்கி, எங்கள் பெருமைகளை தேடிச்செல்லுங்கள். அவைதான் தமிழர் உண்மை மரபாகும். மரபு என்றால் அன்றும் இன்றும் என்றும் மாறாமல் , அறிவியல் ரீதியாகவும் அர்த்தங்களை சுமந்து எங்களின் பெருமைபேசும் உன்னத வாழ்வியல் பண்பாட்டு வழிமுறைகளாகும்.*

# வேம்பிராய் அலாக்கிரக தான்தோன்றி பூதவரத விநாயகர் திருக்கோயில்





‘சிவத் தொண்டன்’
க.ரஜனிகாந்தன்

ஈழத்திருநாடு “சிவபூமி” என திருமூலரால் சிறப்பித்து அழைக்கப்பட்ட பெருமைக்குரியது. அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் தென்மராட்சியின் சாவகச்சேரி நன்நகரிலிருந்து வடக்கு நோக்கி மீசாலை புத்தூர் வீதி காட்சி தருகிறது. அந்த வீதியிலிருந்து புத்தூரை நோக்கிச் செல்லும் வழியில் வேம்பிராய் பதியில் தான்தோன்றியாகக் குடிகொண்டு தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகிறார் கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயமாகும்.

இந்து சமயத்தவர்களினுடைய பண்பாட்டு பாரம்பரியங்களில் எந்தக் காரியத்தையும் நாம் முதலில் தொடங்கும் போது விநாயகப் பெருமானை வணங்கிவிட்டுத்தான் ஆரம்பிக்கின்றோம். அவ்வாறு செய்தால் நினைத்த காரியம் எந்தவிதமான தங்கு தடையின்றி நிறைவேறும் என்பது இந்துக்களின் பாரம்பரிய மரபார்ந்த நம்பிக்கையாகும். மீசாலைப் பதிவாழ் மக்களும் தங்கள் வேண்டுதல்களை நிறைவு செய்து தருமாறு கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகராகிய கலட்டி விநாயகரிடம் முறையிட்டு வெற்றி கண்டுவருகிறார்கள். அளப்பெரும் சக்தி மிக்கவராக விளங்கும் கலட்டி விநாயகப் பெருமான் தான்தோன்றியாகக் காட்சிகொடுத்த வரலாறு தென்மராட்சி மக்களை அதிசயத்தில் ஆழ்த்தியதில் வியப்பேதும் இல்லை.

இவ்வாலயத்தின் அதிசய வரலாறு என்னவெனில் மீசாலை வடக்கைச் சேர்ந்த கதிராமு முருகேசர் என்ற விவசாயி சிறந்த இறை பக்தர். நல்லகாரியங்கள் எதுவாக இருந்தாலும் விநாயகரை வழிபட்ட பின்னரே அதனை ஆரம்பிப்பார். 1838ம் ஆண்டு இனியதொரு நன்நாளில் தனது தோட்டத்தில் பயிரிடுவதற்காக நிலத்தை உழுது பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் முருகேசர். நிலைத்தை மாடுகளால் கலப்பை கொண்டு உழுது பண்படுத்தும் வேளையில், கலப்பையின் கொழுவில் ஏதோவொரு பொருள் கொழுவியுள்ளதை முருகேசர் உணர்ந்தார். அது என்னவெனப் பார்த்தார். அந்தப் பொருள் கல்லாலான ஒரு விநாயகர் விக்கிரமாகக் காட்சியளிப்பதைக் கண்டு வியப்படைந்தார். அந்தநேரத்தில் இன்னொரு விடயமும் அவரை அதிசயத்தில் ஆழ்த்தியது. விக்கிரகத்தின் பழுப் பக்கத்திலிருந்து குருதி வடிந்தோடுவதையும் அவர் கண்ணுற்றார். ஆனந்தக் கண்ணீர் மல்க விநாயகப் பெருமானைத் துதித்தார்.

“பெருமானே சிறியேனாகிய யான் பிழைகள் யாதும் செய்திருப்பின் அதனைப் பொறுத்தருள வேண்டும்” என்று வேண்டினார். மறுபுறத்தில் விநாயகப் பெருமான் காட்சி தந்ததையிட்டு உளம் மகிழ்ந்தார். இந்த அதிசயத்தை வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஊரவர்களுக்கும் காண்பித்தார். மீசாலையூர் மக்கள் இந்தக் அதிசயக் காட்சியைக் கண்டு பெருமானைத் துதித்தனர். விக்கிரகம் வெளிப்பட்ட அதே இடத்திலேயே ஒரு குடிசையை உடனடியாக அமைத்து வழிபட்டு வரலாயினர். விநாயகப் பெருமான் தான்தோன்றியாக வெளிப்பட்ட செய்தி அறிந்த அயல் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் அங்கு வருகைதந்து பெருமானை வழிபட்டு நினைத்த காரியங்களை நிறைவேற்றிக் கொண்டனர். அதன் பின்னர் விநாயகப் பெருமானுக்கு சிறிய அளவில் கட்டடம் ஒன்றைக் கட்டி வழிபாடும் செய்துவரலாயினர். காலவோட்டத்தில் ஆலயம் வளர்ச்சி பெற்றதால் முருகேசரின் சந்ததியினரால் அதனை தனித்து நடத்திச் செல்ல முடியவில்லை. அதனால் 1940ம் ஆண்டளவில் ‘றஸ்ரி’ என்னும் பொதுச் சபையிடம் ஆலயத்தைக் கையளித்தனர். அந்தச் சபை ஆலயத்தின் நித்திய பூசைகளை நடாத்தி கோயிலை நிர்வகித்துவந்தது.



இந்நிலையில், 1983ம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதி ஆலயம், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்துக் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அலங்காரத் திருவிழா இடம்பெற்றுவந்தது. அதுவரை கலட்டிப் பிள்ளையார் என அழைக்கப்பட்ட விநாயகப் பெருமான் அன்றிலிருந்து கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் என்று அழைக்கப்பட்டார். ஆலயத்தை பரிபாலிப்பதற்காக திருக்கோயில் அறங்காவல் சபை உருவாக்கப்பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. 1990ம் ஆண்டு முதல் சித்திரை மாதம் மூல நட்சத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகருக்கு கொடியேற்றத்துடன் பத்துநாட்கள் திருவிழா இடம்பெற்றுவருகின்றது.

இலங்கை 1505ம் ஆண்டிலிருந்து 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரம் அடையும் வரை ஐரோப்பியருடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தமை அனைவரும் அறிந்த விடயம். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையைச் சேர்ந்த பரராஜசேகர மன்னன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். 1519ம் ஆண்டில் சங்கிலி இளவரசன் பரராஜசேகரனைக் கொன்றுவிட்டு, தான் ஆட்சிப்பீடம் ஏறினான். அதனால் பரராஜசேகரனின் மகன் போர்த்துக்கேயரிடம் சரண் புகுந்தான். இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாண இராட்சிய ஆட்சியில் தலையிட்டதோடு, கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் செயற்பாட்டிலும் ஈடுபட்டது. போர்த்துக்கேயரின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட சங்கிலி மன்னன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு அனுமதியளித்தான். பின்னர் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களை மீண்டும் சைவ சமயத்திற்கு திரும்புமாறும் கட்டளையிட்டிருந்தான்.

யாழ்ப்பாண மன்னர்களின் இவ்வாறான போர்த்துக்கேய சார்புக் கொள்ளைகள் காரணமாகவும், போர்த்துக்கேயரின் அடக்குமுறை காரணமாகவும் இந்துமதம் பல்வேறு இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது. அந்நியருக்கு அஞ்சிய இந்துக்கள் ஆலயங்களில் இருந்த மூல விக்கிரகங்களை நிலத்திலும் நீர் நிலைகளிலும் புதைத்தும் மறைத்து வைத்தனர். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மறைத்து வைக்கப்பட்ட விநாயகர் விக்கிரகமாக இது இருக்குமோ என்ற கோணத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் வருகைதந்த ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் 1796ல் வருகைதந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் ஆலயம் அமைந்திருந்த நிலத்திலோ அல்லது அதற்கு அருகாமையிலோ விநாயகர் ஆலயம் எதுவும் அமைந்திருந்தமைக்கான சான்றுகள் தென்படவில்லை. மேலும் பிரதேச வரலாற்று நூல்களை ஆராய்ந்திலும், பெரியவர்களோடு உரையாடியதிலும் அவற்றுக்கான எவ்வித சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே, விக்கினங்களை தீர்க்கும் விநாயகராகிய கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் (கலட்டிப் பிள்ளையார்) தான்தோன்றியாக காட்சி கொடுத்த அதிசய தெய்வமாகவே இன்றுவரை விளங்கி அடியவர்களுக்கு அளுள்பாலித்து வருகின்றார்.

## பரிபாடல் வையைப் பாடல்களில் நீர்ப்பண்பாடு

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிழல் காண் மண்டிலம் எனப்படும் முகம் பார்க்கும் கண்ணாடி சங்ககாலத்தில் இருந்தமை பற்றி பரிபாடல் குறிப்பிடுகின்றது. பரிபாடலில் செவ்வேள் பற்றிய 21 வது பாடலில் ‘நிழல் காண் மண்டிலம் நோக்கி..’ என்ற தொடர் வருகிறது. அதேபோல வையைப்பாடலில் ஆடி, கண்ணாடி ஆகிய பதங்கள் வருகின்றன.

‘வாச நறு நெய் ஆடி, வான் துகள்
மாசு அறக் கண்ணடி வயக்கி வண்ணமும்
தேசும் ஒளியும் திகழ நோக்கி’ (பரி. 12-19)

நீராடி முடித்த பெண்கள் தங்களை ஒப்பனை செய்வதற்கு முன்னர் கண்ணாடியைத் தூய்மைப் படுத்துவதற்கு நறுமணம் மிக்க நெய்யைப் பூசி வெண்மையான கற்பொடியிட்டுத் துலக்கித் தூய்மை யாக்கி அக்கண்ணாடியில் தமது இயற்கையழகையும் செயற்கையழகையும் காதலருடன் புணர்ந்ததால் உண்டான ஒளியையும் கண்டு இன்பமடைகின்றனர். இந்த அரிய செய்தியும் பரிபாடல் ஊடாகப் புலப்படுகிறது. அகநானூறு ‘நிழல்காண் மண்டிலம்’ (பாடல்71) எனவும் குறுந்தொகையில் ‘ஆடிப்பாவை போல’ (பாடல்8) எனவரும் தொடர்களாலும் குறிக்கப்படுகிறது.

நீர் விளையாட்டு முடிந்து அகில் புகையில் ஈரம் உலர்த்தினர். பின்னர் கிண்ணத்தில் மதுவை ஊற்றிப் பருகினர். வெண்மையான துவாயினால் கூந்தலைச் சுற்றினர். சிலர் பொன்னால் செய்த நத்தை, வண்டு முதலியவற்றை ஆற்றில் விட்டு வேண்டுதல் செய்தனர்.

மேலே குறிப்பிட்டவை தவிர வையையில் நீராட மறுக்கும் அந்தணர் செய்கை, ஆடை, அணிகலன், மற்றும் கைத்தொழில் செய்யும் வாணிபர் பற்றிய குறிப்புக்கள், உழவுத் தொழில் செய்யும் வேளாளர், ஆடல் பாடல் நிகழ்த்தும் பாணர் கூத்தர் விறலி பற்றிய பதிவுகள், பல்வேறு இசைக்கருவிகளையும் இசைக்கும் கலைஞர்கள் பற்றிய பதிவுகள், காலத்துக்கேற்ற ஆடைகள், மாலை அணிதல், திலகம் இடுதல், மதுரை நகரின் உள்ளமைப்பு, சுருங்கை எனப்படும் பாதாள வழி, மாட மாளிகைகள், சோதிடம், கொடை, துறவு வாழ்க்கை, மறுபிறப்புக் கருத்துக்கள் ஆகியவையும் வையைப்பாடல்களின் ஊடாக வெளிப்படுகின்றன.

### 3. வையையை வாழ்த்துதல்

வையையை அடைமொழி கொடுத்து விளித்துப்பாடும் பண்பும் நோக்கத்தக்கது. ‘நறுநீர் வையை’ (பரி11:140), ‘பூமலி வையை’ (பரி 20,111), செவ்வேள் பாடலில் ‘வளம்கெழு வையை’ (பரி 17:44), ‘தமிழ் வையைத் தண்ணம்புனல்’ (பரி 6:90), ‘தண்வரல் வையை’ (திரட்டு 3:5) இங்கு தமிழ் வையை என தமிழ் வளர்த்த மதுரை நகரில் பாயும் வையையைப் புலவர் வருணித்துள்ள பாங்கு அவதானிக்கத்தக்கது.

பழந்தமிழரின் வழிபாட்டில் ஆற்றுவழிபாடு தொன்மையானது. எனவே பரிபாடலில் திருமால், செவ்வேள், கொற்றவை வழிபாடு போல வையையும் வழிபாட்டுக்குரியதாக நோக்கப்பட்டுள்ளது.

‘நின் பயம் பாடி விடிவுற்று ஏமாக்க
நின் படிந்து நீங்காமை இன்று புணர்ந்தெனவே’ (பரி 7:85-86)

என்ற அடிகளின் ஊடாக எமக்கு ஏற்பட்ட துன்பம் நீங்கப் பெற்று இன்பம் அடையவேண்டும் உயிர்கள் பசியாலும் நோயாலும் வருந்தாமல் நலம் பெற்று வாழ வையை வந்து பாண்டிய நாட்டில் வளம் கொழிக்கவேண்டும் என்று வாழ்த்திப்பாடுகின்றனர்.

‘வருந்தாது வரும் புனல் விருந்து அயர் கூடல்
அருங் கறை அறை இசை வயிரியர் உரிமை
ஒருங்கு அமர் ஆயமொடு ஏத்தினர் தொழவே’ (பரி 10: 129-131)

என்று உலக உயிர்கள் எல்லாம் பசி பிணி ஆகிய வற்றால் துன்புறாமல் வளத்துடன் வாழ்வதற்காக வறுமையினால் துன்புற்ற புலவர்கள் ஏந்திய கைகள் நிறையுமாறு கொடை வழங்கும் பாண்டியனைப்போல என்றென்றும் வையை ஓய்வின்றி வரவேண்டும் என வாழ்த்திப்பாடுகின்றனர்.


இதேபோல மதுரை மக்களுக்கு நன்மைசெய்யும் வையையின் புகழைத் தன்னிடம் அடக்கிக்கொள்ளும் வாய்ப்பு மண்ணுலகிற்கு இல்லை என ‘நின்புகழ் கொள்ளாது இம் மலர் தலை உலகே’ (பரி 12:102) என நல்வழுதியார் பாடியுள்ளார்.

இவ்வாறாக வையையைப் பாடும் அதிகமான பாடல்களின் இறுதியில் வையையின் பெருமையையும் அதன் ஊடாக பாண்டிய மன்னனின் புகழும் வியந்து போற்றப்பட்டுள்ளது.

### முடிவுரை

எனவே, சங்க இலக்கியங்களில் தனித்துவமாக விளங்கும் பரிபாடலின் வையைப்பாடல்களின் ஊடாக தனியே ‘புனலாடல்’ மட்டுமல்லாமல் அக்கால சமுதாயத்தின் வாழ்க்கைக் கோலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக பரிபாடல் என்ற இலக்கியமும் அதன் தோற்றத்துக்கான பிரதான காரணியும் தமிழர்களின் தொன்மையான வாழ்க்கையினையும் வரலாற்றையும் பதிவுசெய்யப் படுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

# தென்னாட்டு நிகழ்வுகள்





தென்னாடு ஆதிரை அருட்காட்சி



திருவெம்பாவை - பிட்டுப் பூசை



தென்னாடு செய்தியிதழ் வெளியீடு – அதிபர்.சிவத்திரு.அ.ஆனந்தராஜா



தென்னாடு செய்தியிதழ் வெளியீடு - சிவத்திரு.சு.சதீஸ்வரன்



வைத்தியர்.சி.யமுனாநந்தாவின் “ஏங்குறள்” வெளியீடு



நிறைமதிப் பூசை



தென்னாட்டில் திருவெம்பாவை



சித்தரைத் தேடிய தென்னாட்டு பயணம் - சித்தமருத்துவத் துறை, யாழ். பல்கலைக்கழகம்.




தென்னாட்டில் தமிழியின் "காணும் பொங்கல்"

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள் 15ம் நாள் நிறைமதி அன்று (28-01-2021 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org